APPENDIX.

(*Vide* answer to starred question No. 277 on page 172 supra.)

The Director of Public Health has issued an informative press note in the local dailies informing the public about the prevalence of this disease and advising them to report the occurrence of cases to the Corporation Health authorities. The intensification of control measures was discussed by the Director of Public Health with the Commissioner, Corporation of Madras and the Health authorities. As a result of these discussions, the Corporation of Madras has intensified the mosquito control measures. For this purpose, Madras City is divided into 20 zones, each zone consisting of five divisions. Twenty men are working in each zone. They inspect every house and destroy the mosquito larvae in all the breeding places through anti-larvicidal measures. The Government have sanctioned for this purpose the employment of 350 thozhilalies and 60 supervisors.

2. The Government have also declared the epidemic haemorrhagic fever (Dengue and Chikenguniya) as a notifiable infectious disease under the Madras Public Health Act, 1939. A large number of persons were reported to be affected with Dengue fever in Melapalayam at Perambur. Arrangements were made with a Mobile Van Unit to render medical aid daily to the families and to all those affected with Dengue fever. This unit consisting of one doctor, several staff nurses, pharmacists and nursing orderlies was sent daily by turn from the following three institutions :—

(1) Government Royapettah Hospital, Madras.

(2) Government Kasturba Gandhi Hospital for Women and Children, Madras.

(3) Government Kilpauk Medical College and Hospital, Madras.

The situation is under close watch.

பதில்.—(1) பொது சுகாதாரத் துறை நெறியாளர், இந்த நோய் பரவியிருப்பதைப் பொது மக்களுக்கு அறிவிக்கும் வகையிலும், எங்கெங்கு இந்த நோய் காணப்படுகிறதோ அங்கெல்லாம் அதைக் குறித்து மாநகராட்சி சுகாதாரத் துறை அதிகாரிகளுக்கு அறிவிக்கும்படியும், உள்ளூர் செய்தித் தாள்களில் செய்திக் குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளார். பொது சுகாதாரத் துறை நெறியாளர், இந்நோயைத் தீவிரமாகத் தடுப்பதற்கான நடவடிக்கைகளைக் குறித்து சென்னை மாநகராட்சி ஆணையாளருடனும், சுகாதார அதிகாரிகளுடனும் கலந்து ஆலோசித்தார்; மேற்படி ஆலோசனைகளின் விளைவாக, சென்னை மாநகராட்சி கொசுத் தடுப்பு ஏற்பாடுகளைத் தீவிரமாக மேற்கொண்டது. இதற்காக சென்னை நகரம் 20 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு மண்டலமும் 5 வட்டங்களைக் கொண்டது. ஒவ்வொரு மண்டலத்திலும் 20 பேர் பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் ஒவ்வொரு வீட்டையும் பார்வையிட்டு, கொசுக்கள் இனப் பெருக்கம் செய்யும்

19th March 1965]

எல்லா இடங்களிலும் கொசுப் புழுக்களை அழிக்கக்கூடிய தடுப்பு முறைகளைப் பயன்படுத்திக் கொசுக்களை அழித்தார்கள். இதற்காக 350 தொழிலாளர்களையும், 60 மேற்பார்வையாளர்களையும் அமர்த்திக் கொள்ள அரசாங்கம் அனுமதித்தது.

(2) 1939-ம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டத்தின் கீழ், அரசாங்கம் இக்காய்ச்சலை (டெங்கு, சிக்கன்கினியா) குறிப்பிடத்தக்க தொற்று நோய் என்றும் அறிவித்தது. பெரம்பூரில் மேலப்பாளயத்தில் பலர் டெங்குக் காய்ச்சலால் அவதியுற்றதாக அறிவிக்கப்பட்டது. டெங்குக் காய்ச்சலால் அவதியுற்றவர்களுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும், அன்றாடம் மருத்துவ உதவியளிப்பதற்காக ஒரு இயங்கும் மருத்துவ வண்டி (Mobile Van Unit) ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஒரு டாக்டர், பல ஸ்டாப் நர்சுகள், மருந்து தயாரிப்பவர்கள், ஆயாக்கள் இவர்களைக் கொண்ட இந்த யூனிட் கீழ்க்கண்ட மூன்று மருத்துவ மனைகளிலிருந்து அன்றாடம் முறைபோட்டு அனுப்பப்பட்டது.

1. சென்னை அரசாங்க ராயப்பேட்டை மருத்துவ மனை.

2. சென்னை அரசாங்க கஸ்தூரிபாய் காந்தி மகளிர்-சிறார் மருத்துவ மனை.

3. சென்னை அரசாங்கக் கீழ்ப்பாக்கம், மருத்துவக் கல்லூரி, மருத்துவ மனை.

இத்தொற்று நோய் சம்பந்தமான நிலைமை கூர்ந்து கவனிக்கப்பட்டு வருகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS